2005 மார்ச் 14]

திரு. இரா. இராம் பிரபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 45 வயதைக் கடந்த விதவைகளுக்கு அரசு ஓய்வூதியம் வழங்கி வருகிறது. ஆனால், இளம் வயதிலேயே கணவனை இழந்த பெண்களுக்கு அரசு ஓய்வூதியம் வழங்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இளம் விதவைகளுக்கும் அரசு உதவித் தொகை வழங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி பற்றி அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 151, திரு. லா. சந்தானம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

151—

ஆரம்ப சுகாதார நிலையம்

***23448—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், அல்லிக்குண்டம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் படுக்கைகள் வசதி மற்றும் சுற்றுச்சுவர் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அல்லிக்குண்டம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட படுக்கை வசதி இரண்டு ஆகும். அங்கு சிகிச்சை பெறும் உள்நோயாளிகளின் எண்ணிக்கையைக் கருதும்பொழுது, அங்கு கூடுதலாகப் படுக்கை வசதி செய்ய சாத்தியக்கூறுகள் இல்லை. இச்சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் அமைக்கும் கருத்துரு தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை எடுத்துக்கொண்டு, அதற்கு 30 படுக்கைகள் வசதி கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக நிலை உயர்த்துகின்ற ஒரு கொள்கை முடிவினை வைத்திருக்கின்றது. எனது உசிலம்பட்டி

தொகுதியிலேயிருக்கின்ற உசிலம்பட்டி ஒன்றியத்திற்கு இதுவரை அப்படி எந்த ஆரம்ப சுகாதார நிலையமும் நிலை உயர்த்தப்படுகின்ற நிலை இல்லையென்கின்ற காரணத்தினால், இந்த அல்லிக்குண்டத்தைப் பொறுத்தளவிலே, முழுமையாக கிராமப் பகுதிகளைக் கொண்ட மக்கள் வாழுகின்ற பகுதி. அந்தப் பகுதியிலேயிருந்து நகருக்கு வருவதற்கு, ஏறக்குறைய 15 கிலோ மீட்டர் தொலைவு வரவேண்டிய ஒரு சூழ்நிலை. எனவே, முழுமையாக கிராமப்புறங்களைக் கொண்ட அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற மக்கள் பயனடைகின்ற வகையிலே அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட சுகாதார நிலையமாக நிலை உயர்த்துவதற்கு அரசு இந்த ஆண்டாவது சிந்திக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன். அதோடு, சென்ற ஆண்டு, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை நிலை உயர்த்தித் தந்திருக்கிறது இந்த அரசு. அதற்கு என்னுடைய நன்றியையும் தெரிவித்து, இது உசிலம்பட்டி ஒன்றியம் என்பதனால், இந்த ஆண்டு இதனை அரசு பரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற ஆண்டு நிதிநிலைக்கு ஏற்ப மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தினைத் தரம் உயர்த்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 152, திரு. டி. மணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

152—

ஆயுர்வேதக் கல்லூரி

***42407—திரு. டி. மணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி, ஆனையடி எஸ்டேட் பகுதியில் ஆயுர்வேதக் கல்லூரி அமைக்கும் நோக்கம் அரசுக்கு உண்டா?